**17.02.2026.**

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண்.**107/2018**</u>

அ.சா.**23**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமகிருஷ்ணன் | | |
| த/பெ | கண்ணன் | | |
| கிராமம் | கண்டம்பாக்கம் | தொழில் | விவசாயம் |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 44/2026 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 17.02.2026. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். எனக்கு எங்கள் ஊரைச் சேர்ந்த பெருமாள் மகன் சீனுவாசனை தெரியும். சத்தியசீலன், அன்பரசு, புகழேந்தி, பிரதாப், ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் சத்தியசீலன்(4ம் எதிரி), பிரதாப்(5ம் எதிரி), அன்பரசன்(6ம் எதிரி), புகழேந்தி(7ம் எதிரி), ஆகியோரின் ஒப்புதல் வாக்கு மூலத்தில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்துக்களை எதற்கு நான் போட்டேன் என்றால், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து போட்டேன். இந்த 4 ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகசர்களில் 1ம் கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்துகளை நான்

எங்கள் ஊரில் போலீசார் வந்ததற்கு அத்தாட்சியாக வெள்ளைத்தாளில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அதில் என்ன எழுதினார்கள் என்று எனக்குத் தெரியாது. என்னிடம் கையெழுத்து மட்டும் வாங்கினார்கள். என் முன்பு யாரையும், இந்த வழக்கு சம்பந்தமான எதிரிகளையும், போலீசார் விசாரணை செய்யவில்லை. எதிரிகளிடம் இருந்து இருசக்கர வாகனத்தையோ, எதிரிகள் அணிந்திருந்த உடைகளையோ என் முன்பாக கைப்பற்றவில்லை. ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள முதலாம் கையெழுத்து, கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள முதலாம் கையெழுத்து, அ.சா.ஆ.15 முதல் அ.சா.ஆ.24 வரையிலான ஆவணங்களாக குறியீடு செய்யப்படுகிறது.

<u>(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.</u>

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

கடந்த 03/10/2014ம் தேதி காலை 9.00 மணியளவில், நானும், எங்கள் ஊரை சேர்ந்த சீனிவாசன் என்பவரும் சொந்த வேலை காரணமாக, விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையம் சென்றபோது, ஆய்வாளர் எங்கள் இருவரையும் அழைத்து சத்தியசீலன், அன்பரசன், புகழேந்தி, பிரதாப் ஆகியோர்களை எங்களிடம் காட்டி 4 பேரும் எங்கள் முன்பாக ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க உள்ளதாகவும், அதற்கு எங்களை சாட்சியாக இருக்கும் படி கேட்டுக்கொண்டார் என்றும், அதற்கு நாங்கள் சம்மதித்தோம் என்றும், காலை 9.30 மணி முதல் காவல் ஆய்வாளர் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், அதில் எதிரிகள் 1-ம் எதிரியான ராதாகிருஷ்ணன் என்பவர் உடன் கிரிக்கெட் விளையாடும்போது நல்ல பழக்கம் ஏற்பட்டது என்றும், ராதாகிருஷ்ணன் ஏற்கனவே வக்கீல் ஆறுமுகத்தை கொலை செய்த வழக்கில் நீதிமன்றத்திற்கு சென்று

வருவதாகவும், அதனால் ராதாகிருஷ்ணனை பார்த்தால், ஊரே பயந்து மரியாதை கொடுக்கும் என்றும், வக்கீல் ஆறுமுகம் கொலை வழக்கில் முருகன் என்பவர் முக்கிய சாட்சி என்பதால் அவரிடம் சமாதானம் பேசியும், அவர் ஒத்து வராததால் அவரை மிரட்டி பார்த்தும் பணியவில்லை என்றும், அதனால் முருகனை எப்படியோ கொலை செய்ய வேண்டும் என்று தண்ணி அடிக்கும் போது எங்களிடம் கூறி வந்ததாகவும், இந்த நிலையில் 08/09/2014-ம் தேதி திண்டிவனம் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வரப்போவதாகவும், அதற்கு 28/08 | 2014 ம் தேதியில் போலீசார் முருகன் மற்றும் இதர சாட்சிகளுக்கு சம்மன் கொடுத்து விட்டு சென்ற விவரம் ராதாகிருஷ்ணனுக்கு தெரிய வந்ததால், அவரை சகாக்களான சத்தியசீலன், ரகு, அன்பரசு, புகழேந்தி, பிரதாப், சிலம்பரசன், சிவகுமார், அசோக் குமார், விநாயகமூர்த்தி, பலராமன் மகன் ராதாகிருஷ்ணன் ஆகியோர்களை அழைத்து, ராதாகிருஷ்ணன் அனைவருக்கும் பிராந்தி வாங்கி கொடுத்ததாகவும், சம்மன் கொடுத்த விவரத்தைக் கூறி, முருகனின் கதையை முடித்து விட வேண்டும் என்று கூறி, ராதாகிருஷ்ணன் சொல்லிவிட்டு சென்றதாகவும், மற்ற அனைவரும் முருகனை எவ்வாறு கொலை செய்ய வேண்டும் என்று திட்டம் போட்டு அதன்படி அன்பரசு முருகனின் தலையையும், சத்தியசீலன், புகழேந்தி இருவரும் முருகனின் காலையும், கோபாலகிருஷ்ணன் முருகன் மீது ஏறி உட்கார்ந்து முருகனை திமிர விடாமல் கையைப் பிடித்துக் கொண்டார்கள் என்றும், ராதாகிருஷ்ணனும், ரகுவும், மாறி மாறி வெட்டினார்கள் என்றும், மற்றவர்கள் பாதுகாப்பாக நின்று கொண்டிருந்த ஆவேசமாக வெட்டுங்கடா அவனை வெட்டுங்கடா என்று சத்தம் போட்டதாகவும், முருகன் இறந்து விட்டதை ஊர்ஜிதம் செய்து கொண்டு சத்தம் போட்டதை கேட்டு அக்கம் பக்கத்து வீட்டார்கள் வெளியே வந்தார்கள் என்றும், அங்கிருந்த மோட்டார் பைக்கை எடுத்துக்கொண்டு எதிரிகள் தப்பிச் சென்றார்கள் என்றும், 03/10/2014 ம் தேதி தாலுக்கா காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் எதிரிகளைப்

பிடித்து விசாரணை செய்தபோது, கொலை செய்த விவரத்தை ஊறியதாக சத்தியசீலன், அன்பரசு, புகழேந்தி, பிரதாப், ஆகிய நான்கு பேரும் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காலை 6.30 மணி முதல் பதிவு செய்தும், பின் பிரதாப் கொலை செய்து விட்டு தப்பி செல்ல பயன்படுத்திய இருசக்கர வாகனம் TN 04 2029 என்ற பதிவு எண் கொண்ட ஆவணத்தை காவல் நிலையத்தில் மதியம் 1:30 மணி அளவில் எடுத்து வந்த ஆஜர் செய்ததை, போலீசார் மகசரில் கைப்பற்றி, கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தபோது, அதில் நாங்கள் இருவரும் சாட்சியாக கையொப்பம் போட்டோம் என்றும், மேலும் சத்தியசீலன், தன்னை அழைத்து சென்றால் தனது வீட்டில் மறைத்து வைத்திருந்த முருகனை கொலை செய்யும்போது பயன்படுத்திய ஆடைகளை எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னதன் பேரில், 28/08/2014-ம் தேதி மதியம் .3.05 மணி அளவிலும், அன்பரசு கொலை செய்யும்போது உடுத்தயிருந்த ஆடைகளையும், தன் வீட்டின் முன்பு எடுத்து ஆஜா செய்ததை மதியம் 3.35 மணிக்கும், மதியம் 3.25 மணிக்கு எடுத்து வந்து ஆஜர் செய்தார் என்றும், புகழேந்தி தான் அணிந்திருந்த உடைகளை தன் வீட்டில் இருந்து மதியம் 3.45 மணியளவில் ஆஜர் செய்தார் என்றும், பிரதாப் அணிந்திருந்த உடைகளை தன் வீட்டிலிருந்து எடுத்து வந்து மாலை 4.00 முதல் 5.00 மணியளவில் ஆஜர் செய்ததை காவல் நிலையத்தார் தனித்தனியாக பெற்று, கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார்கள் என்றும், அதில் நாங்கள் சாட்சியாக கையொப்பம் போட்டோம் என்றும், இந்த வழக்கில் கொலையுண்ட இறந்து போன முருகன் என்பவரை எதிரிகள் கொலை செய்த விவரத்தை ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தெளிவாக எங்கள் முன்னிலையில் சொன்னார்கள் என்றும், தற்போது நான் எதிரிகள் எங்கள் ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில், உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை.

மறுவிசாரணை

இல்லை